பகுதி 2

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகள்

1978 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் நிதிக் கணக்குகள் தொடர்ந்து வரும் பக்கத்தில் அட்டவணை 2.3இல் தரப்பட்டுள்ளன. 1977ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1978 திசெம்பர் முடிவிலுள்ள பெரும் மாற்றங்கள் பின்வருமாறு.

அட்டவணை 2.1

கணக்குகளின் பெரும் மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மாற்றம் |
|---|---|
| மொத்தக் கேள்விப் பொறுப்புக்கள் ... | + 1,365.3 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ... | + 289.4 |
| கேள்வி வைப்புக்கள் .. | + 1 473.1 |
| வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | — 397.2 |
| பன்னாட்டு ஒதுக்கீடு ... | + 1,806.0 |
| உள்நாட்டுச் சொத்துக்கள் ... | + 229.1 |

\+ அதிகரிப்பு — வீழ்ச்சி

1978 ஆம் ஆண்டிற்கான மத்திய வங்கியின் வருமானம் ரூ. 619,329,410/- ஆகவும், ஒதுக்குகளுக்கான பகிர்வுகள், வங்கிக் கட்டடங்கள், அலுவலகத் தளபாடங்கள் ஆகியவற்றின் பெறுமானத் தேய்விற்காக ஒதுக்கப்பட்டவற்றையும் உள்ளடக்கிய செலவீடு ரூ. 618,329,410/- ஆகவும் விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி தேறிய இலாபமாக ரூ. 1,000,000/- மிகைக்கு மாற்றப்பட்டது.

## வெளிநாட்டுச் செலாவணி

1978 ஆம் ஆண்டில் இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருந்தமையால் அ. ஐ. டொலர், பவுண் ஸ்டேர்லிங், மேற்கு சேர்மன் மார்க்கு, பிரான்சிய பிராங்கு, யப்பானிய யென், இந்திய ரூபா என்பனவற்றிற்கான மத்திய வீதங்கள், மத்திய வங்கியினால் ஒவ்வொரு வேலை நாட்களிலும் பி. ப. 2 மணிக்கு குறிக்கப்பட்டன. ஆண்டு முடிவில் இந்த நாணயங்களுக்கான குறிக்கப்பட்ட வீதங்கள் பின்வருமாறு:

அட்டவணை 2.2

செலாவணி வீதங்கள்

| நாணயம் / 100 அலகுகள் | மத்தியவீதம் | வாடிக்கையாளர்களின் தந்திமுறை மாற்றல்களுக்கான வர்த்தக வங்கிகளின் அலுவல் சார்பான செலாவணி வீதங்கள் | |
|---|---|---|---|
| | | வாங்குதல் | விற்றல் |
| அ. ஐ. டொலர் .. | ரூ. 1550.50 | ரூ. 1549.00 | ரூ. 1552.00 |
| பவுண் ஸ்டேர்லிங் ... | ரூ. 3167.05 | ரூ. 3164.05 | ரூ. 3170.05 |
| சேர்மன் மார்க்கு ... | ரூ. 855.35 | ரூ. 854.55 | ரூ. 856.15 |
| பிரான்சிய பிராங்கு ... | ரூ. 374.60 | ரூ. 374.25 | ரூ. 374.95 |
| யப்பானிய யென் ... | ரூ. 8.0365 | ரூ. 8.0290 | ரூ. 8.0440 |
| இந்திய ரூபா .. | ரூ. 190.65 | ரூ. 190.45 | ரூ. 190.85 |

## 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் நாளில்

### ஐந்தொகை — 1978 ஆம் ஆண்டு திசெம்பர்

| 1977 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1978 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **மூலதனக் கணக்கு** | | |
| 15,000,000 | | முதல் ... ... ... ... | 15,000,000 | |
| 62,000,000 | 77,000,000 | மிகை ... ... ... ... | 63,000,000 | 78,000,000 |
| | | **பொறுப்புக்கள்** | | |
| 3,088,454,433 | | சுற்றோட்டத்திலுள்ள தாள் நாணயங்கள் ... | 3,356,471,756 | |
| 130,683,995 | 3,219,138,428 | சுற்றோட்டத்திலுள்ள குத்தி நாணயங்கள் ... | 152,118,668 | 3,508,590,424 |
| | | **வைப்புக்கள்** | | |
| 89,908,192 | | அரசு ... ... ... | 1,033,559,401 | |
| 14,784,360 | | அரச முகவர் நிலையங்களும், அரச நிறுவனங்களும்... | 15,799,218 | |
| 606,523,969 | | வர்த்தக வங்கிகள் ... ... ... | 737,753,831 | |
| 1,257,344,758 | | பன்னாட்டு அமைப்புக்களும், வெளிநாட்டு அரசு வெளி நாட்டு வங்கி நிறுவனங்களும் ... | 1,569,277,554 | |
| 155,125 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 117,221,800/- இலட்சம் கொண்ட தொகையை நீக்கிய கட்டாய சேமிப்பு நிதி ... ... | 284,447 | |
| 187,855,098 | 2,156,571,502 | ஏனையவை ... ... ... | 272,979,662 | 3,629,654,113 |
| | 552,329,297 | வெளிநாட்டிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 155,116,452 |
| | 75,128,288 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ... | | 125,000,000 |
| | 5,448,926,975 | ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | | 6,743,577,250 |
| | 11,529,094,490 | | | 14,239,938,239 |

### 1978, திசெம்பர் 31ஆம் நாள்

| 1977 திசெம்பர் 31 | | 1978 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 279,927,189 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், தாள் நாணயங்கள், குத்திகள் மீதான செலவையும், வங்கிக் கட்டடத்தினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத்தேய்வையும், உள்ளடக்கும்) நாணயச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட பகிர்வுகளுக்கும். | 618,329,410 |
| 1,000,000 | மீதி, 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற ஆண்டின் தேறிய இலாபம். இதன்பின் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபமானது மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 1,000,000 |
| 280,927,189 | | 619,329,410 |

அட்டவணை 2.3

## உள்ளபடி இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

### 31 ஆம் நாளில் உள்ளபடி

| 1977 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1978 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 3,883,592,323 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும்... | 5,274,583,604 | |
| 275,071,378 | | *வெளிநாட்டு அரசுகளினதும், அரசுகளற்றவற்றினதும் பிணைகள் ... ... | 345,472,040 | |
| 167,863,911 | 4,326,527,612 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் ... ... | 512,381,125 | 6,132,436,769 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 617,409,125 | | அரசிற்கு ... ... ... | 955,500,000 | |
| 54,742,609 | | ஏனையவற்றிற்கு நடுத்தர நீண்டகால | 63,816,667 | |
| 829,837,000 | | குறுங்கால ... | 1,012,122,000 | |
| 2,420,060,839 | 3,922,049,573 | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... .. | 2,119,704,609 | 4,151,143,276 |
| | 3,280,517,305 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... ... | | 3,956,358,194 |
| | | *அரச நிலையங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூபா 5,530,271 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,938,759 ஆகவும், ரூ. 34,340 ஆகவும் இருந்தன) | | |
| | 11,529,094,490 | | | 14,239,938,23 |

## முடிவுற்ற ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1977 திசெம்பர் 31 | | 1978 திசெம்பர் 31 |
|---|---|---|
| ரூபா | | ரூபா |
| 280,927,189 | வட்டி ஏனையவற்றின் மூலம் ... ... ... ... | 619,329,410 |
| 280,927,189 | | 619,329,410 |

**டபிள்யூ இராசபுத்ரம்**
ஆளுநர்

**வெ. சி. சுப்பிரமணியம்**
முதன்மைக் கணக்காளர்

1978ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள், இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும், 1971 இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரிமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு - 7.
1979, மாச்சு 30

**பி. எம். டபிள்யூ. விஜயசூரிய**
கணக்காய்வாளர் நாயகம்.

மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்கள் பின்னிணைப்பு அட்டவணை 7இல் காட்டப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு நாணயத்தாள்கள்**

இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளிடமிருந்து மத்திய வங்கி குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களைக் குறிக்கப்பட்ட வீதங்களில் தொடர்ந்து கொள்வனவு செய்தும் விற்பனவு செய்தும் வந்தது.

**ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்**

மத்திய வங்கி, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தில் உறுப்புரிமை வகிக்கும் ஒரு வங்கியாகத் தொடர்ந்து விளங்கியது. உறுப்புரிமை வகிக்கும் ஏனைய வங்கிகளுக்கு கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவாக ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஊடாக 1978ஆம் ஆண்டிற்காக இலங்கையால் கொடுக்கப்பட்ட தேறிய தொகை ரூ. *1,081,383,001.10* ஆகும்.

**1977 ஆம் ஆண்டின் எண் 17 கொண்ட வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் (நீக்கல்) சட்டம்**

மேற் குறிப்பிட்ட சட்டம் பிரிவு *3(1)* இன்படி, நீக்கல் சட்டம் பிரிவு 2இல் குறிப்பிடப்படாத வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டத்தின் தொழிற்பாட்டுடன் தொடர்பான தீர்க்கப்படாத விடயங்கள் யாவும் முடிவு செய்யப்பட்டன.

**இந்தியாவுக்கு குடியகன்று செல்வோரின் உதவிப்பணம்**

*1977* நவெம்பர் *16*இலிருந்து ஒன்றிணைக்கப்பட்ட செலாவணி வீதங்கள் முறையை அறிமுகப்படுத்தியதன் விளைவாக 1964 இன் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்தியாவுக்கு குடியகன்று செல்வோருக்கு பணம் அனுப்புவதற்கு இசைவளிக்கப்பட்ட தொகையின் 65% இற்கு சமனான தொகையை அல்லது அதில் ஒரு பகுதியை அரசு வழங்க முடிவுசெய்தது.

குடியகன்று செல்லும் இந்திய வழித்தோன்றல்களான தோட்டத் தொழிலாளருக்கு அவர்கள் இலங்கையை விட்டு செல்வதை ஊக்குவிக்குமுகமாக இலங்கை ரூ. 500/- ஐயும் இத்தொகையின் 65%யும் தண்ணளிக் கொடுப்பனவாகக் கொடுப்பதற்கு அரசு முடிவுசெய்தது. மேற்சொல்லப்பட்ட இவ்விரு திட்டங்களையும் அரசின் சார்பாக மத்திய வங்கி செயல்முறைப்படுத்துகின்றது. குடியகன்று செல்வோர் பணம் அனுப்பும் வேளையில் வர்த்தக வங்கிகளினால் கொடுக்கப்படும் முற்பணங்கள் மத்திய வங்கியினால் மீளக் கொடுக்கப்படுகின்றன.

**உள்ளூர் வங்கித் தொழில்**

அரச பிணைகள், வர்த்தக, உற்பத்திக் கடன்கள் தொடர்பான வாகுக்குறுதிச் சான்றிதழ்கள் என்பவற்றிற்கு எதிரான முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் ஆண்டிற்கு 10% ஆகத் தொடர்ந்திருந்தது. கூட்டுறவுச் சங்கங்கள், வேளாண்மை பணி நிலையங்கள், ஒப்புதல் வழங்கப்பட்ட தனியாட்கள் ஆகியவற்றிற்கு உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கும் உள்ளூர் வேளாண்மை விளைபொருட்களைக் கொள்வனவு

செய்வதற்கும் விற்பனை அல்லது சேமித்து வைப்பதற்கும் வழங்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பான வாக்குறுதிச் சான்றிதழ்களின் அடகுகளுக்கு எதிராக வர்த்தக வங்கிகளுக்கான மத்திய வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 3% ஆக மாறாமல் இருந்தது. கூட்டுறவு சங்கங்கள், வேளாண்மையாளர்கள் ஆகியவர்களின் நெல், மரக்கறி, ஏனைய குறிப்பிட்ட பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி தொடர்பாக வாக்குறுதிச் சான்றிதழ்களின் அடகினால் உறுதிப்படுத்தப்பட்ட கடன்களின் பொருட்டு வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் முற்பணங்கள் மீதான வட்டிவீதம் ஆண்டிற்கு 1½% ஆகத் தொடர்ந்திருந்ததுடன் வர்த்தக வங்கிகள் இந்த வசதியை தங்களுக்கு பயன்படுத்துமுகமாக கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ஆண்டிற்கு 8% இற்கு மேற்படாத வட்டியையும் (உரிய நாளில் கொடுப்பனவு செய்யப்பட்டால் ஆண்டிற்கு 3% தள்ளுபடிக்கமைய) நேரடியாக கடன்கள் வழங்கப்பட்ட வேளாண்மையாளர்களிடமிருந்து 9% க்கு குறையாத வட்டியையும் அறவிட வேண்டுமென்ற ஏற்பாட்டையும் கொண்டிருந்தது.

திறைசேரி உண்டியல்கள் மீதான மத்திய வங்கியின் கழிவு வீதம் கேள்வியாளரால் அல்லது மத்திய வங்கியிலிருந்து திறைசேரி உண்டியல்கள் கொள்வனவு செய்யப்பட்ட வீதத்திற்கு மேலாக 1/8% ஆகத் தொடர்ந்துமிருந்தது,

**கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

1978இல் நெல், காய்கறிகள், ஏனைய குறிப்பிட்ட பயிர்கள் என்பனவற்றின் உற்பத்தி, தேயிலை, மீள்நடுகை தேயிலைத் தொழிற்சாலை புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட ரூ. 223,434,443.44 தொகை கொண்ட கடன்களுக்கு அரசின் சார்பில் மத்திய வங்கி உத்தரவாதமளித்தது. அரசு இத்திட்டத்தை 1978 ஒற்ரோபரிலிருந்து புறக்கீடு செய்வதற்கு முடிவு செய்தது.

**நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன்**

நடுத்தர, நீண்ட தவணைக் கொடுகடன் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியால் கொடுகடன் நிறுவனங்கட்கு வழங்கப்பட்ட மீள நிதியிடற் கடன்களின் மீதான வட்டி வீதங்கள் பின்வருமாறு அமைந்திருந்தன.

(அ) வேளாண்மையினை ஊக்குவித்தல் அல்லது அபிவிருத்தி செய்வதற்கு ஆண்டிற்கு 6½% சதவீதம்

(ஆ) வேளாண்மையற்ற நோக்கங்களுக்கு ஆண்டிற்கு 7½% சதவீதம்,

இவ்வாண்டுக்காலப்பகுதியில் கொடுகடன் நிறுவனங்கட்கு ரூ.21,071,008.96 கொண்ட மொத்தத் தொகை மீளநிதியிடற் கடன்களாக வழங்கப்பட்டன.

**வங்கிப் பற்று வரிகள்**

மத்திய வங்கியே தொடர்ந்தும் வங்கிகளின் பற்றுவரிச் சேர்ப்பனவிற்குப் பொறுப்பாக இருந்தது.

**கட்டாயச் சேமிப்புகள்**

1971 ஆம் ஆண்டின் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புச் சட்டம், 1972ஆம் ஆண்டின் எண் 15 கொண்ட வருமானம், கட்டாயச் சேமிப்பு மீதான உச்சவரம்புச் சட்டம் ஆகியவற்றின்கீழ் சேர்க்கப்பட்ட பணத்திற்கு மத்திய வங்கி தொடர்ந்தும் காவலனாக விளங்கியதுடன் அரசின் சார்பில் கட்டாயச் சேமிப்பு நிதியத்தையும் நிர்வகித்து வந்தது. இந்த ஆண்டுக் காலப்பகுதியில் வங்கி பெற்ற 6,829 மீளளிப்பு விண்ணப்பங்களுக்கு ரூ, 19,309,364.56 (வட்டி உட்பட) கொண்ட தொகையை உதவுநர்களுக்குச் செலுத்தியது.

**நாணய வெளியீடு**

1978 இறுதியில் மொத்த நாணயச் சுற்றோட்டம் ரூ. 35,086 இலட்சமாக விளங்கியதுடன் கடந்த ஆண்டு தொகையான ரூ. 32,191 இலட்சத்திற்கு மேலாக ரூ. 2,895 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1978இல் நாணயத்தாள் சுற்றோட்டம் கடந்த ஆண்டுத் தொகையான ரூ. 7,976 இலட்சத்திற்கு எதிராக ரூ. 2,680 இலட்சத்தால் அதிகரித்துள்ளதுடன் இந்த அதிகரிப்பில் ரூ. 100/– இனத்தாள்கள் ரூ. 2,206 இலட்சத்தைக் கொண்டிருந்தது. 1978இல் நாணயக்குத்திகளின் மொத்தச் சுற்றோட்டம் எல்லா இனங்களின் அதிகரிப்புடன் ரூ. 215 இலட்சமாக விளங்கியதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூ. 144 இலட்சம்கொண்ட அதிகரிப்பையும் கொண்டிருந்தது.

1978இல் இலங்கையின் மரபுவழிச் சின்னங்களைக் கொண்ட புதிய நாணயத் தாள்கள் ரூ. 100, ரூ 50 கொண்ட இனங்களில் வெளியிடப்பட்டன. இத்தாள்கள், 1970 ஒற்றோபர் 25ஆம் நாளுக்குப் பின் வெளியிடப்பட்ட தாள்களின் அளவுகளையும், இனங்களையும் கொண்டுள்ளன. புதிய தாள்களுடன் பழையனவும் தொடர்ந்தும் சுற்றோட்டத்தில் இருக்கின்றன,

மக்களாட்சி சமவுடமைக் குடியரசான இலங்கையின் முதலாவது குடியரசுத் தலைவரின் பதவியேற்பை நினைவு கூரும் முகமாக, மாட்சிமை தங்கிய குடியரசுத் தலைவரின் தலையுருப்பொறிப்பை கொண்ட ரூ. 1இன நினைவு குத்திகள் வெளியிடப்பட்டன. இக்குத்திகள் தற்போதுள்ள ஒரு ரூபா குத்திகளின் மாதிரியையும், விட்டத்தையும் கொண்டிருந்தன.

1978இல் நிக்கல் பித்தளையில் பதியப்பட்ட 5 சத, 10 சத இன நாணயக் குத்திகள் பற்றுக்குறை காரணமாக நிக்கல், பித்தளை குத்திகளை முற்றாக மாற்றீடு செய்யும் நோக்கத்துடன், அலுமினிய கூட்டு உலோகத்தில் பதியப்பட்ட புதிய நாணயக் குத்திகள் இதே இனங்களில் வெளியிடப்பட்டன. ஏனைய எல்லா முறைகளிலும் இந்நாணயக்குத்திகள் நிக்கல் பித்தளையில் பதியப்பட்ட நாணயக்குத்திகளை ஒத்திருந்தன.

**வங்கி மேற்பார்வை**

1978 இல் நாணயச் சட்டத்தின் பிரிவு 29 (1)இன் கீழ் எட்டு வர்த்தக வங்கிகளின் மேலாய்வுகளை வங்கி மேற்பார்வைத்திணைக்களம் தொடங்கி அதில் ஆறு வங்கிகளின் மேலாய்வுகளை நிறைவேற்றியது.

1975 ஆம் ஆண்டின் எண் 32 கொண்ட சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1 970 ஆம் ஆண்டின் எண் 27 கொண்ட வங்கிப் பற்று வரிச் சட்டத்தின் நிருவாகத்தோடு தொடர்புடைய கடமைகளை இத்திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. வங்கிப் பற்றுவரிச் சட்டத்தின் 15ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் சான்றிதழ்களில் கொடுபடவேண்டிய செய்திகளை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக வர்த்தக வங்கிகள் மேலாய்வு செய்யப்பட்டன.

### அபிவிருத்தி நிதி

1978 இல் அபிவிருத்தி நிதித்திணைக்களத்தின் தொழிற்பாடுகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் நிறுவனங்கள், மத்திய வங்கியில் நடுத்தர நீண்ட கால கொடுகடன் நிதியத்திலிருந்து மீள நிதியைப் பெறுவதை மதிப்பீடு செய்வதுடன், இத்திணைக்களம் சிறு கைத்தொழில்களுக்காகக் கைத்தொழில் அபிவிருத்திச்சபையுடன் சேர்ந்து ஒரு கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இவை தவிர 1979 சனவரியில் தொழிற்பாட்டுக்கு வந்த அலகைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள் விரிவடைந்திருந்தன.

இந்த ஆண்டில் ரூ. 121 இலட்சம் தொகையுள்ள மீள்நிதி பின்வரும் நோக்கங்களுக்காக ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அட்டவணை 2.4

நடுத்தர நீண்ட தவணை மீள்நிதி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| நோக்கங்கள் | தொகை |
|---|---|
| உண்வகச் செயற்றிட்டங்கள் | 2.8 |
| கடற்றொழில் | 5.6 |
| கைத்தொழில் | 2.2 |
| வேளாண்மை | 1.5 |
| மொத்தம் | 12.1 |

### தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி

இந்த ஆண்டில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க, தேயிலைக் கைத்தொழிலில் முதலீடு செய்வதற்கு செயற்றிட்ட இனம் காணும் ஆய்வு முடிவடைந்தது. தேயிலைத் தொழிற்சாலை புதுப்பித்தல், மின் ஊட்டல் ஆகியனவற்றிற்கும் இவை தொடர்பான வெளிக்கள அபிவிருத்திக்கும் கொடுகடன் வழங்குவதைத் தீர்மானிக்கும் முகமாக செயற்றிட்டத்தை மதிப்பீடு செய்வதற்கு வல்லுநர்களை அனுப்புவதற்கு இசைவளித்த ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் மேற் குறிப்பிட்ட ஆய்வு ஒப்படைக்கப்பட்டது.

**கடற்றொழில்**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கடற்றொழில் அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு அதன் செயலாக்கத்திற்காக அபிவிருத்தி நிதித் திணைக்களம் தொடர்ந்தும் உதவி செய்து வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் கீழ் பலவகை கடற் கலங்கள் வழங்குகையில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5

**கடற்றொழில் படகுகள்**

| படகு வகை | செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்படவேண்டிய எண்ணிக்கை | 1978இல் வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை | 1976 ஒகத்திதிலிருந்து 1977 திசெம்பர் வரை வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 28 அடி | 200 | 104 | 96 |
| 38 அடி | 30 | 24 | 6 |

கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனியார்துறைக்கும் வழங்கப்பட்ட படகுகளின் எண்ணிக்கையையே மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது. இலங்கை வங்கியிடமிருந்தும் மக்கள் வங்கியிடமிருந்தும் பெறப்பட்ட கடன்களின் நிதியைக் கொண்டு இப்படகுகள் கொள்வனவு செய்யப்பட்டன. திணைக்களம், கடற்றொழில் அமைச்சுடன் சேர்ந்து செயற்றிட்டத்தின் கீழ் வழக்கப்பட்ட படகுகளைக் காப்புறுதி செய்வதற்கு ஒரு காப்புறுதித் திட்டத்தை வரைவதற்கு துணை புரிந்துள்ளது. விரிவான ஆய்வின் பின் படகு சொந்தக்காரர்களின் பங்கு நிதிகளைக் கொண்டு படகு இடர்நிதிக் கணக்கைத் தொழிற்படுத்துவதற்கு திணைக்களம் முன்மொழிந்துள்ளது.

**அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதங்கள்**

அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதத்தின் கீழ் வழங்கப்பட்ட காப்புறுதிகள், குறிப்பாக வர்த்தக வங்கிகளால் கப்பல் ஏற்றுவதற்கு முன்னை கொடுகடன்கள் சார்பில் வழங்கப்பட்ட கப்பல் ஏற்றுமதிக்கு முன்னை இழப்புக் கொடுப்பனவுகள் போன்ற சில வகைகள் பெருமளவு அதிகரித்துள்ளன இதனோடு தொடர்புடைய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.6

**அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதங்கள்**

| ஆண்டு | திட்டம் உருவாகியதை அடுத்து வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் எண்ணிக்கை | மொத்த அனுமதிக்கப்பட்ட எல்லைகள் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | ஆண்டு முடிவில் நடைமுறையிலுள்ள உத்தரவாதங்கள் | |
|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட எல்லைகள் பத்து இலட்சம் ரூபாய்களில் |
| 1977 | 41 | 22.7 | — | — |
| 1978 | 96 | 96.1 | 52 | 65.3 |

இத்திட்டத்தின் கீழ் இசைவளிக்கப்பட்ட கொடுகடன் எல்லைகளின் பண்டங்கள் வகையிலமைந்த பகுப்பு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.7

அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதங்கள்

| பண்டம் | வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் எண்ணிக்கை | இசைவளிக்கப்பட்ட கொடுகடன் எல்லைகளின் மொத்தம் ரூபா |
|---|---|---|
| 1. தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்களும், பழச்சாறுகளும் | 2 | 710,000 |
| 2. தும்பும், ஏனைய உற்பத்திப் பொருட்களும் ... | 5 | 2,850,000 |
| 3. தைக்கப்பட்ட உடைகள் ... | 11 | 31,975,000 |
| 4. நறுமணப் பொருட்கள் ... | 10 | 7,400,000 |
| 5. இரத்தினக்கற்கள், நகைகள், மெருகூட்டப்பட்ட வைரங்கள் முதலியன .. | 3 | 2,350,000 |
| 6. உள்ளூர் மூலப்பொருட்களிலிருந்து பெறப்பட்ட இன்றியமையாத எண்ணெய் வகைகள் ... | 1 | 750,000 |
| 7. இறப்பரிலுலான பொருட்கள் .. | 1 | 650,000 |
| 8. தோலும், தோல் உற்பத்திப் பொருட்களும் ... | 2 | 850,000 |
| 9. கடல் உற்பத்திப் பொருட்கள் ... | 9 | 5,850,000 |
| 10. தளபாடமும், ஏனைய மர உற்பத்திப் பொருட்களும் ... | 3 | 609,620 |
| 11. போகப்படகுகளும், கண்ணாடி நார்ப்படகுகளும் ... | 2 | 9,300,000 |
| 12. இலவம் பஞ்சு .. | 1 | 15,000 |
| 13. மருந்து சார்ந்த பூண்டுகள், பசகு மருந்துகள் முதலியன | 1 | 50,000 |
| 14. பார் சவர்க்காரம் .. | 1 | 2,000,000 |
| மொத்தம் | 52 | 65,359,620 |

### ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதி

1979 பெப்புருவரியில் தொடங்கத் திட்டமிட்டிருந்த இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிறுவுதலுடன் சம்பந்தப்பட்ட ஆயத்த வேலைகளில் திணைக்களம் மிகவும் நெருங்கிய நிலையில் பணிபுரிந்தது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் திணைக்களம் கூட்டுத்தாபனத்தின் நிறுவுதலுக்கான மாதிரிச்சட்டமூலம் தயாரித்தலையும், ஆளணி பயிற்சியையும், ஆவணம் அமைத்தலையும் மேற்கொண்டது. புதிய கூட்டுத்தாபனம் நிறுவுதலுடன் அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேங்கியுள்ள வியாபாரமனைத்தையும் மத்திய வங்கி கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கும்.

### சிறு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதம்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் கூட்டாக, இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பவற்றினல் சிறு கைத்தொழிலாளருக்கு வழங்கப்பட்ட கடன்களை மாற்றீடுசெய்வதற்கு, மத்திய வங்கி அரசின் சார்பாக நாணயச்சட்டம் பிரிவு 108இன் கீழ் சிறு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்பாடுகளை ஏற்றுக்கொண்டது. திட்டத்தின் தயாரிப்பும் செயற்பாடுகளும் இத்திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்டன 1978 ஏப்பிறலில் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மத்திய வங்கி உண்மையாக வழங்கப்பட்ட தொகையில் அல்லது திருப்பியளிக்கத் தவறிய தொகையில் எது குறைந்ததோ அதில் 75 சதவீதத்திற்கு உத்தரவாதமளிக்கின்றது. முதல் ஒன்பது மாத தொழிற்பாட்டில் 79 செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களில், உத்தரவாதமளிக்கப் பட்ட தொகை ரூ. 19 இலட்சமாகவுள்ள வேளையில் மேலும் ரூ. 204,156 ஆனது சந்தைப்படுத்தல் கடன்களுக்காக உத்தரவாத மளிக்கப்பட்டது. ஆண்டு முடிவில் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிப் பெறுததனல் இழப் புக்கள் ஏற்பட்டதென்று கோரிக்கைகள் எழவில்லை வழங்கப்பட்ட உத்தர வாதங்களின் கைத்தொழில் வகையான பகுப்பு பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை 2.8

### வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் கைத்தொழில் வகையான பகுப்பு

| கைத்தொழில் வகை | எண் | தொகை (ரூபா) |
|---|---|---|
| பனங்கட்டி ... | 10 | 324,950 |
| தோல் பைகள் ... | 1 | 12,500 |
| கறுவா எண்ணெய் ... | 1 | 40,000 |
| ஊதுபத்திகள் ... | 1 | 57.800 |
| செங்கட்டிகள் .. | 13 | 68,700 |
| வேலைப்பாடுள்ள இரும்புக் கதவுகள் ... | 2 | 14,500 |
| ஓட்டு வேலைகள் ... | 2 | 5,842 |
| தும்பு ... | 2 | 58,845 |
| தளபாடங்கள் ... | 3 | 48,000 |
| வானொலிப்பெட்டி உதிரிப்பாகங்கள் ... | 5 | 183,180 |
| நகைகள் ... | 2 | 12,110 |
| ஆடைகள் ... | 5 | 163,000 |
| நீர் இறைக்கும் பொறிகள் ... | 1 | 8,684 |
| சவர்க்காரம் ... | 2 | 21,800 |
| தையல் வேலை ... | 2 | 8,880 |
| வார்ப்பு வேலை ... | 2 | 12,950 |
| கொல்லவேலை ... | 1 | 1,851 |
| பிகின் ... | 1 | 45,000 |
| எண்ணெய் வடி ... | 1 | 2,817 |
| தாள் கோப்பைகள் ... | 1 | 3,509 |
| கொடிகள் அச்சிடல் ... | 1 | 10,000 |
| மரம் ... | 2 | 7,606 |
| லொறி வண்டி செய்தல் ... | 1 | 25,000 |
| கடைசல் பொறிகள் ... | 3 | 128,100 |
| அரிசி அரைத்தல் ... | 2 | 202,000 |
| சீனி ... | 4 | 122,825 |
| பற்றிக் துணிகள் ... | 1 | 4,500 |
| இறப்பர் ... | 2 | 108,920 |
| இறப்பரால் செய்யப்பட்ட நார் ... | 1 | 55,000 |
| உலோக அமுக்கல் ... | 1 | 99,000 |
| ஈக்கில் தும்புத்துடைப்பங்கள் ... | 1 | 43,400 |
| பீடி ... | 1 | 8,000 |
| புத்தகம் கட்டுதல் ... | 1 | 4,180 |
| கம்பளங்கள் ... | 1 | 15,000 |
| வைக்கோல் தொப்பி ... | 1 | 7.000 |
| தேயிலைப் பெட்டிகள் ... | 1 | 15,000 |
| காலணிகள் ... | 1 | 4,000 |
| பூச்சுப் பூசிய வாளிகள் ... | 1 | 30,320 |
| கண்ணாடி ... | 1 | 9,440 |
| மீன்பிடி படகுகள் ... | 1 | 116,200 |
| மொத்தம் | 86 | 2,010,410 |

### நிதி, முகாமை மீதான அளவீடு

1978இல் ''சிறு கைத்தொழில்கள் மீதான நிதி முகாமை'' பற்றிய அளவீட்டையும் இத்திணைக்களம் நடாத்தியது. இச்சிறு துறைக்கு தொடக்க நிலையிலும் நிதியிடப்பட்ட பின்பும் எழும் நிதிச் சிக்கல்களைக் கண்டறிவதும், இத்துறைக்குத் தேவையான பயிற்சிகளைப் பற்றி அறிவதுமே இந்த அளவையின் முதன்மை நோக்கங்களாகும். ரூ. 500,000/= அல்லது அதிலும் குறைந்த கைத்தொழிற் தொகுதியையும், பொறியையும் முதலீட்டாகக் கொண்ட முப்பது நிறுவனங்கள் இந்த அளவைக்குத் தெரிநதெடுக்கப்பட்டன. இந்த அளவை இரண்டு முக்கியமான உண்மைகளை எடுத்துக்காட்டின.

(அ) இம்மாதிரி அளவையில் பயன்படுத்தப்பட்ட நிறுவனங்கள் எதுவும் தொடக்க நிலையில் வங்கியிடம் நிதி பெறும் நிலையில் இருக்கவில்லை. எனினும், இலாபம் பெற்ற நிலையில் இவற்றுள் சில குறிக்கப்பட்ட வசதிகளை வங்கிகளிடமிருந்து பெறும் நிலையில் இருந்தன. வங்கிக் கொடுகடனைப் பெறுவதிலுள்ள இத்தகைய கட்டுப்பாடுகள் வங்கிகளின் பழமை பேணுந் தன்மையும் பாதுகாப்பு அடிப்படையிலமைந்த கடன் வழங்கும் கொள்கைகளையும் எடுத்துக் காட்டுவது போல அமைகின்றது.

(ஆ) மாதிரி அளவீட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு கைத்தொழிலாளர்கள் எவரும் நிதி முகாமையிடல் பயிற்சி தேவையெனக் கருதவில்லை. இக்காலப் பகுதியில் சிறு கைத்தொழிலாளர்களின் தொழிற்பாடுகள் எல்லையளவு விரிவைக் கொண்டிருந்தபடியால் நிதி முகாமையிடலை திருத்தவேண்டிய தேவை இருக்கவில்லையென்னும் கருத்து நிலவியிருக்கலாம். எனினும் அவர்களுடைய நிதிமுகாமையிடல் பற்றிய அறிவின்மையே வங்கியிடமிருந்து நிதி பெறுவதில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளுக்கு ஒரு காரணமாகும்.

### கரும்புசெய்கைக் கடன்களை ஒட்டிய அளவீடு

திட்டமிடல், செயற்படுத்தல் அமைச்சினதும், அபிவிருத்திச் செயலாளர் குழுவினதும் வேண்டுகோளுக்கிணங்க இத்திணைக்களம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி, வேளாண்மை அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்பட்டு பிழையாகப் பயன்படுத்தப்பட்ட கடன்களின் அளவை நிர்ணயிப்பதற்காக ஒரு அளவீட்டை மேற்கொண்டது. இந்த ஆய்வின் பெறுபேறுகள் திட்டமிடல் செயற்படுத்தல் அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

### தேசிய அபிவிருத்தி வங்கி

நிதி, திட்டமிடல் அமைச்சினால் மத்தியவங்கியுடன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி இத்திணைக்களம், அபிவிருத்திச் செயலாளர் குழுவினால் குறிப்பிடப்பட்ட பல அரச பிரிவு செயற்றிட்டங்களை மதிப்பீடு செய்வதை மேற்கொண்டது. இவ் ஏற்பாட்டின் கீழ் தேசிய அபிவிருத்தி வங்கிக்கு அரசின் முதல் பங்களிப்பாக 1978ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ரூ. 3,900 இலட்சம் ஒதுக்கப்பட்டு மத்தியவங்கியில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிதி அரச பிரிவுக் கூட்டுத்தாபனங்களின் முதலீட்டுச் செலவினங்களுக்காக இத்திணைக்களத்தின் மதிப்பீட்டுக்கிணங்கப் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் தேசிய அபிவிருத்தி வங்கி நிறுவுதலுக்கான சட்டத்தின் மாதிரி எடுத்துரைப்புக்கள் தயாரிக்கப்பட்டு 1978 நவெம்பரில் சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**பொதுப்படுகடன்**

நிதி ஆண்டு முடிவில் வெளிநிற்கும் மொத்தப் பொதுப்படுகடன் ரூ. 30,949 818,155 ஆகும். இது உள்ளூர் படுகடன் ரூ. 16,367,554,626உம் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 14,582,263,529உம் கொண்டுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மொத்தப் பொதுப்படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 5,963,917,272 ஆகும். இவ்வதிகரிப்பு உள்ளூர், வெளிநாட்டு கடன்களில் முறையே ரூ. 1,975,174,900 உம் ரூ. 3,988,742,372உம் கொண்டுள்ளது.

1978ஆம் ஆண்டு முடிவிலுள்ள பொதுப்படுகடனின் உள்ளடக்கம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

அட்டவணை 29

**பொதுப்படுகடனின் அமைப்பு**

| படுகடனின் வகை | | தொகை (ரூபா) |
|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட உள்ளூர் படுகடன் | ... | 12,747,589,444 |
| (i) ரூபாக் கடன்கள் | ... | 12,049,061,600 |
| (ii) நிருவாகக் கடன்கள் | ... | 698.454,005 |
| (iii) தேசிய அபிவிருத்தி முறிகள் | ... | 73,839 |
| 2. நிலையற்ற படுகடன் | ... | 3,619,965,182 |
| (i) திறைசேரி உண்டியல்கள் | ... | 2,635,000,000 |
| (ii) வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | ... | 29,465,182 |
| (iii) மத்திய வங்கி முற்பணங்கள் | ... | 955,500,000 |
| (iv) சிறப்பு கடன்கள் | ... | — |
| 3. வெளிநாட்டுக் கடன்கள் | ... | 14,582,263,529 |
| (i) செயற்றிட்டக் கடன்கள் | ... | 4,833,051,153 |
| (ii) பண்டக் கடன்கள் | ... | 8,969,926,870 |
| (iii) ஏனையவை | ... | 779,285,506 |
| 4. மொத்தப் பொதுப்படுகடன் | ... | 30,949,818,155 |

**உள்ளூர்க்கடன்**

(அ) ரூபாக் கடன்கள்: 1978 நிதியாண்டிற்கான அரசின் வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளூர் வங்கியல்லாத மூலங்களிலிருந்து ரூ. 17,500 இலட்சம் திரட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இத்தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூலங்களிலிருந்து பெறப்படுதல் உதவுதொகைகளினால் ஈடுசெய்யப்பட்டது.

## அட்டவணை 2.10

### ரூபாக் கடன்களுக்கான கட்டணங்கள்

| வழங்குநர்கள் | தொகை (பத்து இலட்சம் ரூ.) | சதவீதம் |
|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி ... | 378.12 | 21.6 |
| கூட்டு முதலீட்டு நிதி .. | 590.13 | 33.7 |
| ஊழியர் சேமநிதியம் — | 576.39 | 32.9 |
| காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 150.36 | 8.6 |
| ஏனையவை ... | 55.00 | 3.2 |
| மொத்தம் | 1,750.00 | 100.0 |

மொத்த நீண்ட கால ரூபாக் கடன் தொகையான ரூ. 17,500 இலட்சம் ரூ. 2,000 இலட்சம் கொண்ட எட்டுக் கடன்களாலும் ஒரு ரூ. 1,500 இலட்சம் கொண்ட கடனாலும் ஆக்கப்பட்டது. இந்தக் கடன்திட்டம், 1978 சனவரியில் தொடக்கப்பட்டு, 1978 நவெம்பரில் முடிவுக்கு வந்தபொழுது முழுத்தொகையும் அறவிடப் பட்டிருந்தது. அரச துறையின் முதலீட்டு நிதித் தேவைகளுக்கேற்ப கடன்களும் அமைந்திருந்தன.

இக்கடன்கள் 1977இன் ஒதுக்கீட்டுச் சட்டம் எண் 25இன் கீழ் திரட்டப் பட்டதுடன் குறிப்பிட்ட சட்டத்தின் எல்லையான ரூ. 51,550 இலட்சங்களுக்கு உட்பட்டிருந்தது.

(அ) நிர்வாகக் கடன்பாடுகள்: மத்திய வங்கி, இலங்கை அரச வர்த்தக (திரட்டப்பட்ட ஏற்றுமதிகள்) கூட்டுத்தாபனம் ஆகியவை ஊடாக சேர்மனி, ஈரான், லிபியா ஆகிய நாடுகளிலிருந்து அரசுக்குக் கிடைத்த மூன்று கடன்கள் நிர்வாகக் கடன்பாடுகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டன. இந்தக் கடன்களுக்கான மொத்த ரூபா பொறுப்புக்களின் தொகை ரூ. 698,454,005 ஆகும்.

(இ) தேசிய அபிவிருத்தி முறிகள்: 1961 இன் நிதிச்சட்டம் எண் 65 பிரிவு 19 (1) இன் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளரால் தேசிய அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டில் கொடுக்கல் வாங்கல் எதுவும் நடைபெறவில்லை. எனவே, 1977 திசெம்பர் 31இல் வெளிநிற்கும் தொகை மாறாமல் இருந்தது.

(ஈ) திறைசேரி உண்டியல்கள்: ஆண்டில் திறைசேரி உண்டியல்களின் ஒப்பு தலளிக்கப்பட்ட எல்லை ரூ.30,000 இலட்சத்தில் மாறாமல் இருந்தது. 1978 திசெம்பர் முடிவில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களும் வெளிநிற்கும் தொகைகளும் சேர்ந்து ரூ 26,350 இலட்சங்களாக விளங்கியதுடன் ஆண்டில் இது ரூபா 1,350 இலட்சம்கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. மத்திய வங்கியின் பங்கு ரூ. 20,879 இலட்சத்துடன் வங்கித்தொழில் பிரிவு மொத்தமாக ரூ. 21,999 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களை வைத்திருந்

தன. அரச முகவர் நிலையங்கள் ரூ. 2,700 இலட்சத்தையும் ஏனையவை ரூ. 1,651 இலட்சத்தையும் வைத்திருந்தன.

(உ) வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்: ஒப்புதலளிக்கப்பட்ட எல்லை ரூ. 7.500 இலட்சங்கள் ஆகும். 1978 திசெம்பர் இறுதி வரை வழங்கப்பட்ட வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்மொத்தம் ரூ. 722,983,200ஆகும். இத்தொகையில் வெளிநிற்கும் தொகை ரூ. 29,405,182 நீங்கலாக மீதி ரூ. 693,518,018 தொகையுடைய சான்றிதழ்கள் ஒப்படைக்கப்பட்டன. ஆண்டு முடிவில் வைத்திருந்த வரி ஒதுக்குச்சான்றிதழ்களில் ஏற்பட்ட தேறிய வீழ்ச்சி ரூ. 11,095,380 ஆகும்.

(ஊ) மத்திய வங்கியின் முற்பணங்களும் சிறப்புக் கடன்களும்: மத்திய வங்கியின் முற்பணங்கள் ரூ. 411,600,000 ஆல் அதிகரித்தும் சிறப்பு கடன்கள் ரூ. 73,509,125 ஆல் வீழ்ச்சியடைந்தும் விளங்கின.

**வெளிநாட்டுக்கடன்**

நிதிஆண்டு 1978இன் முடிவில் நிருவாகக் கடன்கள் நீங்கலாக வெளிநிற்கும் மொத்த வெளிநாட்டுக் கடன்கள் ரூ. 14,582,263,529ஆக இருந்ததுடன் ஆண்டில் ரூ. 3,988,742,372 கொண்ட அதிகரிப்பையும் பதிவு செய்தது. செலாவணி வீதங்களில் ஏற்பட்ட தளம்பல்களினல் ரூபா நிலுவையிலேற்பட்ட மீளமைவின் காரணமாக மேலதிகக் கடன் பொறுப்பாக ரூ. 773,026,499ஐயும் இது உள்ளடக்குகின்றது. 1978இல் புதிய கடன்களான ரூ. 48,920 இலட்சங்களானது ஒப்பந்தவகை மூலங்களிலிருந்து ரூ. 32,119 இலட்சங்களாலும் ஆக்கப்பட்டன. இந்த ஆண்டில் செயற்றிட்டக் கடன்களின் கீழ் கொடுப்பனவுகள் தொகை ரூ. 1,584,442,259ஆனது ஒப்பந்த வகை, இருவுடையான மூலங்களிலிருந்து முறையே ரூ. 648,567,536, ரூ. 935,874,723 உம் ஆகும்.

ஆண்டின்போது பண்டக் கடன்களின் கீழ் வழங்கப்பட்ட தொகை ரூ. 1,342,996,096 ஆகும். இதற்கு இருபுடை மூலங்கள் முழுத்தொகையையும் வழங்கியது.

**கடன் தீர்ப்பனவு**

(அ) கடனழிப்பு: இந்த ஆண்டில் முதிர்ச்சியடைந்த மூன்று ரூபாக்கடன்களும் திருப்பியளிக்கப்பட்டன. 1958இல் இலங்கை அபிவிருத்திக்கடன் சட்டத்தின் கீழ் திரட்டப்பட்ட ரூ. 200 இலட்சம் கொண்ட 3¼% 1974—78கடன் தொகை அதற்கென உண்டாக்கப்பட்ட கடன்கரைப்புநிதியம் மூலம் செலுத்தப்பட்டது. இந்தக் கடன் செலுத்தியபின் கடன் கரைப்பு நிதியத்தில் ரூ. 1,068,204/45 மீதியிருந்தது. இது ஒன்று திரட்டிய நிதிக்கு வரவு வைக்கப்பட்டது. தேசிய அபிவிருத்திக்கடன் திட்டத்தின் கீழ் 1952இல் திரட்டப்பட்ட கடனை ரூ. 65,525,600இற்கும் 1955இல் திரட்டப்பட்ட கடன் ரூ. 7,054,000 இற்கும் கடன் கரைப்பு நிதியங்கள் ஏற்படுத்தப்படாத காரணத்தால் ஒன்று திரட்டிய நிதியிலிருந்து செலுத்தப்பட்டன.

1978இல் திருப்பிச் செலுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் தொகை ரூ. 501,366,091ஆகும். திருப்பிச் செலுத்தப்பட்டவற்றில் செயற்றிட்டக் கடன்கள் ரூ. 154,013,110உம் பண்டக்கடன்கள் ரூ. 347,352,981உம் ஆகும்.

(ஆ) வட்டிக் கொடுப்பனவுகள் மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில், பொதுப் படுகடன் திணைக்களத்தினால் செலுத்தல் உள்நாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 1,054,724,639 ஆக விளங்கியதோடு ரூபாக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் மொத்தத் தொகைகளின் 79,6 சதவீதத்திற்கு வகை கூறின. படுகடன் வகைகள் அடிப்படையிலான வட்டிக் கொடுப்பனவுகள் கீழே தரப்பட்டுள்ளன. வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 285,031,966,56 ஆக விளங்கின.

அட்டவணை 2.11
வட்டிக் கொடுப்பனவுகள்

| வகை | (ரூபா) | சதவீதம் |
|---|---|---|
| 1. திறைசேரி உண்டியல்கள் ... | 173,919,871 | 16.5 |
| 2. வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் .. | 986,391 | 0.1 |
| 3. ரூபாக் கடன்கள் .. | 839,929,008 | 79.6 |
| 4. நிர்வாகக் கடன்பாடுகள் .. | 39,889,369 | 3.8 |
| (அ) ஈரானிய கடன் ... | (36,814,200) | — |
| (ஆ) கே. எப். டப்ளியூ. சேர்மனி .. | (1,006,167) | — |
| மொத்தம் | 1,054,724,639 | 100.0 |

(இ) கடன்கரைப்பு நிதியங்கள் ஆண்டு முடிவில் ரூபாக் கடன்களை செலுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட கடன்கரைப்புநிதியத்தின் பெறுமதி ரூ. 3,204,092,869.77 ஆக விளங்கி ஆண்டின்போது ரூ.652,283,996.23 கொண்ட அதிகரிப்பொன்றைப் பிரதிபலித்தது. இவ்வதிகரிப்பு பின்வருமாறு அமைந்திருந்தது.

| | | |
|---|---|---|
| 1978 காலப்பகுதியில் கடன்கரைப்பு நிதியத்தின் உதவுதொகை | | ரூ. 417,314,358.50 |
| முதலீடுகளிலிருந்தான தேறிய வருமானம் | | ரூ. 256,037,842.18 |
| மொத்தம் | | ரூ. 673,352,200.68 |
| கழிக்குக | | |
| கடன் செலுத்தலிற்காகப் பயன்படுத்தப்பட்ட தொகை | ரூ. 20,000.000.00 | |
| கடன் மீட்பின் பின்னர் திரட்டு நிதியத்தில் வரவு வைக்கப்பட்ட கடன் கரைப்பு நிதியமிகை | ரூ. 1,068,204.45 | |
| | | ரூ. 21,068,204.45 |
| | | ரூ. 652,283,996 23 |

**அரச சார்புடைய நிறுவனங்களின் கடன்பாடுகள்**

1978 ஆண்டுக் காலப்பகுதியில் தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன்சான்றிதழ்களில் புதிய வெளியீடுகள் யாதும் இருக்கவில்லை. 1950இல் வழங்கப்பட்ட ரூ. 100 இலட்சம் கொண்ட தொகுதிக்கடன்கள், இவ்வாண்டுக்காலத்தில் கடன் கரைப்பு நிதியத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்டது. நிதியத்திலிருந்த

மிகுதி தேசிய வீடமைப்பு நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. 1978 இறுதியில் வழங்கப்பட்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன், வெளிநிற்கும் தொகை ஆகியவை ரூ. 810 இலட்சமாக இருந்தன. 1973 காலப்பகுதியில் தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடனின் கடன் செலுத்தனவிற்கு நிறுவப்பட்ட நிதியத்தின் சந்தைப் பெறுமதி ஏறக்குறைய ரூ. 39,878,019ஆக விளங்கி ரூ. 1,506,408 கொண்ட வீழ்ச்சியொன்றைக் காட்டியது.

1978இல் அரச ஈட்டு வங்கியின் தொகுதிகடன் சான்றிதழ் எதுவித கொடுக்கல் வாங்கல்களும் இல்லை. ஆண்டு முடிவில் வழங்கப்பட்டு வெளிநின்ற தொகுதிக்கடன் சான்றிதழ் மொத்தப் பெறுமதி ரூ. 32,250,000 ஆக தொடர்ந்து விளங்கியது,

**செலாவணிக்கட்டுப்பாடு**

வர்த்தகம், கொடுப்பனவுகள் ஆகியவற்றைத் தளர்த்துவது தொடர்பாக அரசு மேற்கொண்ட முடிவினைத் தொடர்ந்து 1977ஆம் ஆண்டு நவெம்பர் 15க்குப் பின்னர் பல்வேறு செலாவணிக்கட்டுப்பாடு வழிமுறைகள் தளர்த்தப் பட்டன. பலவேளைகளில் பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகளை அனு மதித்தல் தொழிற்பாடுகள் ஆகியன வர்த்தக வங்கிகளிடம் கையளிக்கப் பட்டன. முக்கியமான தளர்வுகள் கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் பல தளர்வுகள் 1979ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து நடைமுறைக்கு வந்தன.

**செலாவணிக் கட்டுப்பாட்டு தளர்வுகள்**

(1) விடுமுறைச்சுற்றுலா போய் வருவதற்கான பயணச் செலவும் அடிப்படைச் செலாவணிச் சலுகைப்பணமும் அதிகரிக்கப்பட்டு இந்தியா சார்ந்த நாடுகளுக்கு (வங்காள தேசம், பர்மா, இந்தியா, மாலைத்தீவு, நேபாளம், பாகித்தான் தாய்லாந்து) ஏனைய நாடுகளுக்கு முறையே 2, 4 ஆண்டுகளுக்கொருமுறை வழங்கவும் அனுமதிக்கப்பட்டது.

(2) அலுவல்சார்பு, வியாபார மருத்துவ பயணம்: கட்டுப்பாடான முறையில் அனுமதிக்கப்பட்டு வந்த அலுவல்சார்பு வியாபார, மருத்துவ பயணச்செலவும் செலாவணியும் பெருமளவு கட்டுப்பாடு தளர்வுகளுடன் கிடைக்க வகை செய் யப்பட்டன. அலுவல்சார்பு பயணங்களுக்கான செலாவணி பல்வேறு நாடுக ளுக்கும் பொருத்தமான உயர்ந்தவீத நிரல் அடிப்படையில் அனுமதிக்கப்பட் டன. கூட்டு நிலையத்தின் பணிப்பாளதலைவர், பங்காளர் அல்லது உரிமை யாளர் ஆகியோரின் விதந்துரையின் அடிப்படையில் கட்டுப்பாடற்ற முறை யில் வியாபாரப் பயணங்களுக்கான செலாவணி வழங்கப்பட்டது. மருத்துவ விடுதிக்கட்டணங்கள் உட்பட மருத்துவ தேவைகளுக்கு அதிகரித்த செலாவணி வழங்கப்பட்டது,

(3) கல்வி:பட்டதாரி மாணவர்கட்கும் பின் பட்டப்படிப்புமாணவர்கள் வெளி நாடுகளில் ஒப்புதல் பெற்ற பல்கலைக்கழகத்தில் பயிலுவதற்கும், இலங்கையில் கிடைக்காத சிறப்பான, தொழில்நுட்பப் பயிற்சி பெறுவதற்கும் செலாவணி வழங்கப்பட்டது.

(4) இலாபங்களையும் பங்கிலாபங்களையும் அனுப்புதல்: கட்டுப்பாடான நிலை யில் இங்கு வதியாத பங்காளருக்கு அனுப்பப்படும் இலாபங்களுக்கும், பங்கி லாபங்களுக்கும் கட்டுப்பாடற்ற முறையில் முழுமையாக வழங்க உரிமைய ளிக்கப்பட்டது.

**(5)** குடிபெயர்ந்து செல்வோருக்கு செலாவணி: குடிபெயர்ந்து செல்வோருக்கு அதிகரித்த செலாவணி வழங்கப்பட்டது. சொந்தப் பயன்பாட்டிற்குரிய பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவது தளர்த்தப்பட்டது.

**(6)** வதிவற்றோரின் தடுக்கப்பட்ட கணக்குகள்: வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடாதென வதிவற்றவர்களின் தடுக்கப்பட்ட கணக்குகளில் வைத்திருக்கப் பட்ட பணம் ஒவ்வொரு கணக்கிற்கும் ஆகக்கூடியது ரூ. 100,000 என்ற அடிப்படையில் வழங்கப்பட்டது.

**(7)** சொந்தப் பயன்பாட்டிற்குரிய நகைகளின் ஏற்றுமதி: தனியாட்கள் வெளி நாடுகளுக்கு கொண்டு செல்லக்கூடிய நகைகளின் பெறுமதி உயர்த்தப்பட்டது.

**(8)** மீள் மாற்றுதற்குரிய நாணயம்: சுற்றுலாப் பயணிகளாலும், இடைப் போக்குப் பயணிகளாலும் செலவழிக்கப்படாத ரூபாக்களை வெளிநாட்டு நாணயங்களாக மீள மாற்றுவதற்கு வர்த்தக வங்கிகளால் விதிக்கப்பட்ட உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டது.

**(9)** மேலதிகப்பொதி: மேலதிகப் பொதிகளுக்காக அனுமதிக்கப்படும் செலா வணி இரட்டிக்கப்பட்டது.

**வர்த்தக வங்கிகளுக்கு மேலாண்மை வரியை வழங்கல்**

வர்த்தக வங்கிகளுக்கு பின்வருவனவற்றிற்கு ஒப்புதல் வழங்குவதற்கு மேலாண்மை வழங்கப்பட்டது.

(1) சுற்றுலாப்பயணம், வியாபாரம், அலுவல்சார், மருத்துவம் ஆகிய வற்றுக்கான பயணச்செலவும் செலாவணியும்.

(2) வாழ்க்கைத் தொழில் நிறுவனங்களுக்கான கட்டணம், வெளி நாட்டு தேர்வுகளுக்கான கட்டணம், அஞ்சல் தொடர்பு கல்வி நெறிக்கான கொடுப்பனவு.

(3) குடிபெயர்ந்து செல்வோரின் பயணச்செலவு, மேலதிகப்பொதி, செலாவணி, சொந்தப் பாவிப்புக்கான நகையும், சொந்தப் பாவிப் புக்கான பொருட்களும், கப்பல் கட்டணமும்.

(4) வதிவற்ற பங்குதாரர்களது இலாபமும், பங்கிலாபமும் அனுப்பல்.

(5) சில பற்றுக்கள் வரவுகள் தொடர்பாக செலாவணிக்கட்டுப்பாட்டு அனுமதி அடிப்படையில் இலங்கைக்கு வெளியே வதியும் தனியாட் கள் இலங்கைக்கு வெளியே பதியப்பட்ட கூட்டு நிலையங்கள் பேரில் வதிவற்றோர் கணக்குகளைத் திருத்தலும் பேணுதலும்.

(6) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் இசைவு பெற வேண்டியன தவிர்ந்த அனுமதிப்பத்திரங்கள்.

(7) முகவர்களுக்கும், வாங்குனர்களுக்கும் தரகுக்கூலி அனுப்பல்கள்.

(8) செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அனுமதி பெற வேண்டிய தவிர்ந்த இறக்குமதி கடன்பத்திரங்களுக்கான கொடுப் பனவுகள்.

(9) அனுப்புனரால் வேண்டப்படுமிடத்து, உள்வரும் பண அனுப்பல்களை திருப்பிக் கொடுத்தல்.

(10) இலங்கையில் வதிவோர், விருந்தினரின் பெயரில் பெறப்பட்ட பணவருகைகளுக்கு, அவர்களின் போக்குவரத்துச் செலவினங்களுக்காக செலாவணி வழங்கல்.

(11) வெளிக்கணக்குகளிலிருந்து பண அனுப்பல்களையும் பயணச் செலவுக்கான கொடுப்பனவுகளும்.

(12) வதிவற்ற விருந்தினரின் பணயச் செலவுகள் இலங்கை ரூபாவில் கொடுக்கப்படவேண்டுமிடத்து, அத்தகைய வதிவற்ற விருந்தினர்கள், அவ்வாறான பயணச் செலவுக்குப் போதுமான தொகையினை வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து ரூபாவாக மாற்றப்பட்டிருப்பதை நிரூபிக்குமிடத்து அனுமதியளித்தல்.

**ஊழியர் சேமநிதி**

இலங்கை மத்திய வங்கி தனது ஊழியர் சேமநிதித் திணைக்களத்தினூடாக 1958ஆம் ஆண்டின் 15ம் எண் கொண்ட ஊழியர் சேமநிதிச்சட்டத்தின் கீழ் செலுத்து தொகைகள் குற்றக் கட்டணங்கள் மற்றும் நிதியிலிருந்து முதலிடப்பட்டுப் பெறப்படும் வருமானம் முதலிய அனைத்து தொகைகளையும் தொடர்ந்தும் பெற்று வருவதோடு அச்சட்டத்தின் 5ம் விதிக்கிணங்க இப்பணம் தொடர்பான ஏனைய தொழிற்பாடுகளையும் செயற்றிறனுடன் ஆற்றி வருகிறது. 1978 ஆண்டுக் காலப்பகுதியில் அதனது தொழிற்பாடுகள் பற்றிய ஒரு விரிவான குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.12**

**ஊழியர் சேமநிதித்தரவுகள் 1977—78**

| | 1977 | 1978 |
|---|---|---|
| 1. பதிவுக்குட்பட்ட தொழில் அமைவுகளின் எண்ணிக்கை | 81,959* | 85,656* |
| 2. பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை ... | 1,334,558* | 1,386,591* |
| 3. பெறப்பட்ட உதவுதொகைகள் (ரூபா) ** ... | 304,838.236 | 537,257,501 |
| 4. முதலீடுகள் (ரூபா) ... | 397,981,740 | 641,964,728 |
| 5. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் (ரூபா)... | 169,222,583 | 206,137,224 |
| 6. செலுத்தப்பட்ட மீளளிப்புக்கள் (ரூபா) ... | 89,357,790 | 122,012,108 |
| 7. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 41,154 | 42,525 |
| 8. வட்டி வீதம் (%) ... | 7.5 | 7.5 |
| 9. உறுப்பினர்களின் வரவிலுள்ள நிலுவைகள் மீதான வட்டி (ரூபா) ... | 176,717,325 | 227,641,001 |

*மூலம்: தொழில் திணைக்களம்

**மாற்றலைப் பொறுத்து தொங்கல் கணக்குகளில் விரைவில் வைக்கப்பட்ட உதவுதொகைகள் நீங்கலாக

**உறுப்புரிமையும், பதிவு செய்யப்பட்ட தொழில் அமைவுகளும்**

தொழில் திணைக்களத்தில் கிடைக்கக்கூடிய தரவுகளின்படி பதிவு செய்யப்பட்ட தொழில் அமைவுகள் 1977இல் 81,959இலிருந்து 1978இல்85,656ஆக அதிகரித்தது. இது 4.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். இத்தொழில் அமைவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் தொகை 1977 இல் 1,344,528க்கு எதிராக 1978 இறுதியில் 1,386,591ஆக உயர்ந்தது. இது 2.1 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும்.

**உதவு தொகைகள்**

இந்த ஆண்டில் நிதிக்குக் கிடைத்த உதவு தொகைகள் 1977இல் ரூ. 3,050 இலட்சத்துக்கு எதிராக ரூ 5,240 இலட்சம் ஆகும். இது கடந்த ஆண்டின் உதவு தொகை மட்டத்திலும் பார்க்க ரூ. 2,190 இலட்சம் அல்லது 72 சதவீத அதிகரிப்பைக் கொண்டு விளங்குகிறது.

1978 ஆம் ஆண்டின் இறுதியில் உறுப்பினர்களின் வரவிலுள்ள நிலுவைகள் ரூ.32,630 இலட்சமாக விளங்கியதுடன் 1977 மட்டத்திலும் பார்க்க ரூ. 6,870 இலட்சம் அல்லது 27 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

**முதலீடுகள்**

1978 ஆம் ஆண்டின் நிதி ரூ.6,420 இலட்சத்தை அரச பிணைகளில் முதலீடு செய்தது. இது 1977 ஆம் ஆண்டைப்பார்க்கிலும் ரூ 2,440 இலட்சம் அல்லது 61 சத வீதம் கொண்ட அதிகரிப்பாகும். நிதியின் மொத்த முதலீடுகள் 1977 ஆம் ஆண்டின் ரூ. 24,910 இலட்சங்களுக்கு எதிராக 1978 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 31,330 இலட்சங்களாக இருந்தன.

**முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாய்கள்**

1977இன் ரூ. 1,600 இலட்சங்களுக்கெதிராக 1978 இல் முதலீட்டில் இருந்து கிடைத்த வருவாய்கள் ரூ. 2,060 இலட்சங்களாகும். இது முன்னைய ஆண்டின் ரூ. 280 இலட்சம் அல்லது 21 சதவீதம் அதிகரிப்புக்கு எதிராக ரூ. 460 இலட்சம் அல்லது 29 சதவீதம் அதிகரிப்பைக் கொண்டு விளங்குகிறது. இதற்கு அதிகரித்த உதவுத்தொகையின் முதலீடும், பழைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்களின் மீள் முதலீடும் காரணங்களாகும்,

**மீளளிப்புகள்**

1978 இல் மீளளிப்பு நலங்களின் பொருட்டு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,220 இலட்சங்களாகும். இது 1977 உடன் ஒப்பிடுகையில் ரூ,330 இலட்சங்கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1978 இல் செலுத்தப்பட்ட மீளளிப்புக்களின் தொகை 1977 இன் 41,157 இற்கு எதிராக 42,526 ஆகும்.

ஊழியர் சேமநிதியின் முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து உறுப்பினர்களின் வரவிலுள்ள நிலுவைகளின் மீதான வட்டியை செலுத்தல் வேண்டும். உறுப்பினர்களின் வரவிள்ள நிலுவைகளின் மீதான வட்டி வீதம் தொடர்ந்து 7.5 சதவீதமாக இருந்தது. செலுத்த வேண்டிய வட்டியின் அளவு 1977 இன் ரூ. 1,800 இலட்சங்களுக்கு எதிராக 1978 இறுதியில் ரூ 2,280 இலட்சங்களாக இருந்தது. இது முன்னைய ஆண்டிலும் பார்க்க ரூ. 480 இலட்சம் அல்லது 27 சதவீதம் கொண்ட அதிகரிப்பை பதிவு செய்கின்றது.

ஆண்டு முடிவில் உறுப்பினர்களின் வரவிலுள்ள நிலுவையில் வரவு வைக்கப் பட்ட வட்டி அதன் பின்னர் மொத்தத் தொகையுடன் சேர்க்கப்பட்டது. அதாவது உறுப்பினர்கள் கூட்டு வட்டி முறையில் வட்டி பெறுகிறார்கள். இது தவிர ஆண்டு முடிவில் உறுப்பினர்களின் வரவிலுள்ள நிலுவையின் மீதான ஆண்டு முழுவதற்குமான வட்டி, உறுப்பினர்களின் கணக்கிற்கு நிதியால் பெறப்பட்ட ஒருபகுதி (உதவுதொகைகளைக் குறிக்கின்றது) கொண்டுவரப்பட்ட நாளில் தங்கியிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக திசெம்பரில் பெறப்பட்ட உதவு தொகை அந்த ஆண்டு முழுவதற்குமான வட்டியைப் பெறுகின்றது. இதே போல் சனவரியில் பெறப்பட்ட உதவுதொகை அந்த ஆண்டு முழுவதற்குமான வட்டியைப் பெறுகின்றது. எனவே ஒரு உறுப்பினர் பெறும் சரியான வட்டி வீதம் 7.5 சதவீதத்திலும் சிறிது கூடுதலாக இருக்கின்றது.

**புள்ளிவிபரம்**

1978ஆம் ஆண்டில் தரவுகள் சேகரிப்பதற்கான விரிவான திட்டமொன்று தொடக்கப்பட்டது. பத்து ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் நுகர்வோர் நிதி அளவையானது பலதரப்பட்ட சமூக பொருளாதாரத் தரவுகளை உள்ளடக்குவதாய் மாற்றியமைக்கப்பட்டதோடு இவ்வளவையை ஐந்துவருடங்களுக் கொருமுறை நடாத்துவதாகவும் முடிவெடுக்கப்பட்டது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் எல்லா வட்டாரங்களையும் உள்ளடக்கும் 100 வெவ்வேறு நிலையங்களிலிருந்து தரவுகள் சேகரிப்பதற்காக முழு நாட்டையும் உள்ளடக்கும் தரவுச் சேர்க்கைத் திட்டமொன்று தொடக்கப்பட்டது. இவ்விரிவாக்கப்பட்ட தரவுகள் சேகரிக்கும் திட்டம் அரசாங்கத்தின் இறக்குமதித் தளர்த்தல் திட்டத்தைக் கட்டுப்படுத்தலையும், பொருளாதாரத்திற்குத் தொடர்பான பலதரப்பட்டபுள்ளிவிபரச் சான்றுகளையும் உள்ளடக்கியுள்ளது.

**நுகர்வோர் நிதி, சமூகப் பொருளாதார அளவீடு - 1978 – 79**

மத்திய வங்கியானது நுகர்வோர் நிதி அளவைகளின் தொடரில் முதலாவது அளவையை 1953இல் நடத்தியது. இதே போன்ற அளவைகள் 1963இலும், 1973இலும் நடாத்தப்பட்டன. இவ்வளவைகளின் முக்கிய நோக்கம் குடும்பத்தினரின் நுகர்வுமுறை, அவர்களின் வருவாய் மூலங்கள், அவர்களின் வருவாய்க்கும் முதலீட்டிற்கும், வருவாய்க்கும் கடன்பாட்டிற்குமான தொடர்பு பற்றிய தகவல்களைப் பெறுவதேயாகும். வேலைவாய்ப்பு, மற்றும் ஏனைய சமுதாய நிலைப் புள்ளிவிபர ஆய்வு தொடர்பான வேறுபாடுகள் பற்றிய துணைத் தரவுகளும் சேகரிக்கப்பட்டன.

அண்மை ஆண்டுகளில் குடும்பத்தினரின் நுகர்வு முறைகளிலும், வருமானப் பாகுபாட்டிலும் ஏற்படும் தீவிர அமைப்பு மாற்றங்களினால் மத்திய வங்கி ஐந்து ஆண்டுகளுக்கொருமுறை நுகர்வோர் நிதி அளவைகளை நடாத்துவதற்கு முடிவுசெய்தது. முன்னைய நுகர்வுநிதி அளவைகளின் அதே அடிப்படையில் தகவல் பெறுவதற்கான ஒரு மாதிரி அளவை 1978 முற்பகுதியில் திட்டமிடப்பட்டது. அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இன்று வரையான பலதரப்பட்ட சமூகப் பொருளாதார வேறுபாடுகள் பற்றிய தரவுகள் அவசியம் தேவைப்பட்டமையால் இவ்வாண்டின் பிற்பகுதியில் இவ்வளவையின் நோக்கையும் பொருள் உள்ளடக்கத்தையும் விரிவாக்க முடிவு செய்யப்பட்டது. ஆகவேஇத்தேவைகளை நிறைவேற்றுவதற்காக''நுகர்வோர் நிதி, சமூகப் பொரு

ளாதார அளவை 1978-79" என்னும் புதிய மாதிரி அளவையொன்று உருவாக்கப் பட்டது. நான்கு முறைகள் சென்ற இவ்வளவையில் முதன்முறை அளவையின் வெளிக்கள ஆய்வு 1978இன் இறுதிக் காலாண்டில் முடிவுற்றது. இம் முதன் முறை அளவையின் பெறுபேறுகள் 1979 நடுப்பகுதியில் கிடைக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வளவை எடுத்துக்காட்டாக கிராமிய, நகர தோட்டத் துறைகளி லிருந்து எடுக்கப்பட்ட 8,000 குடியிருப்போரை உள்ளடக்குவதாய் அமையும். முன்னைய அளவைகளைப் போலல்லாது தற்போதைய அளவை நான்கு முறையில் ஒரு வருட காலப்பகுதிக்குள் நடாத்துவதாகவும், ஒவ்வொரு முறையும் எடுத் துக்காட்டாக 2,000 குடியிருப்போரைக் கணக்கிடுவதாயும் உத்தேசிக்கப் பட்டது நான்கு முறைகளில் சேகரிக்கும் தரவுகள் இரு நோக்கங்களுக்குப் பயன்படுத்தக்கூடியதாயிருக்கும். முதலாவதாக இவ்வளவையின் கீழான சமூக பொருளாதார வேறுபாடுகளின் பருவகால வேறுபாடுகளைக் காட்டுவதற்கு உதவியாயிருக்கும், இரண்டாவதாக மொத்த மதிப்பீடுகள் பருவகால வேறு பாட்டை உள்ளடக்கும்.

### இலங்கையில் தனியார் முதலீடு

இவ்வளவையின் நோக்கும், உள்ளடக்கமும் 1977ஆம் ஆண்டுப் பொருளா தார மீளாய்வில் விபரமாகக் காட்டப்பட்டுள்ளது. குடும்பத்தினர் துறையை உள்ளடக்கும் வெளிக்கள வேலை 1977இல் முடிவுற்றிருக்கையில், கைத்தொழில் துறை தொடர்பான வெளிக்கள ஆய்வு 1978 மாச்சு 27இற்கும் 10இற்கும் 1978 யூலை இடையிலான காலப்பகுதியில் நடைபெற்றது. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட விணப்பத்திரத்திற்கு வியாபாரத்துறை மிகக் கூடியளவில் இணக்கம் காட்டா திருந்தமையால் 1978 ஒகத்து 16 இற்கும் 1978 செத்தெம்பர் 3 இற்கும் இடையிலான காலப்பகுதியில் இத்துறையாளரை நேரடியாகச் சந்தித்து செவ்வி காணப்பட்டது. இத்தரவுகளைப் பதனிடுவதும், அறிக்கை எழுதுவதும் 1979 இறுதிவரை தொடரும்.

### இறக்குமதித் தளர்த்தல் திட்டத்தைக் கட்டுப்படுத்தல்

இறக்குமதித் தளர்த்தல் திட்டத்தைக் கட்டுப்படுத்தவும், எதிர்காலங்களில் இறக்குமதி உண்டியல்களைப் பற்றி முன்கூட்டியே அறிவிக்கவும் தரவுகள் சேகரிக்கும் முறை ஒன்று உருவாக்கப்பட்டது. இம்முறை திறக்கப்பட்ட நாணயக் கடிதங்கள், திருத்தியமைக்கப்பட்ட நாணயக் கடிதங்கள், நாணயக்கடிதங்களை வைத்துப் பெறப்பட்ட உண்டியல்கள் ஆகியன பற்றி வர்த்தக வங்கிகளிலிருந்து தரவுகள் பெறவும் பயன்படுத்தப்பட்டது. இத்தரவுகள் பின்வரும் முறையில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

அ. நான்கு இலக்கம் கொண்ட பி. தீ. தொ எண்களினுல் பாகு படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களின் பெறுமதிகள்.

ஆ. இறக்குமதி வகைகளினுல் பாகுபடுத்தப்பட்ட நாணயக் கடிதங் களினது பெறுமதிகளின் மேலும் விபரமான பாகுபாடு.

இ. 1977 நவெம்பர் 15ஆந் திகதிய 291/7 எண் தாங்கிய சிறப்புச் செய்தி மடலின் பட்டியல் 1இனதும் 2இனதும் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட நாணயக் கடன்களின் பெறுமதிகள்.

ஈ. வெளிநிற்கும் நாணயக் கடன்களின் பெறுமதிகள், இவ்வட்டவணை யில், உண்மையாகப் பயன்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்கள் பற்றிய தகவலும் தரப்பட்டுள்ளது.

**நாடெங்கும் பரவலான தரவுகள் சேகரிக்கும் முறை**

1978இல் நாடெங்கும் பரவலான தரவுகள் சேகரிக்கும்முறையொன்று தொடக்கப்பட்டது. ஆய்நிலைக்காலத்தில் நாடெங்கும் பரவலாகவிருக்கும் நூறு இடங்களிலிருந்து காலத்திற்குக் காலம் பின்வரும் தகவல் சேகரிக்கப்படு கின்றது:—

அ. நுகர்வோர் பொருட்களின் சில்லறை விலைகளும், அவற்றின் கிடைக் குந்தன்மையும்.

ஆ. வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள்.

இ. நெல் பயிரிடுதல், சிறு உடைமைகளில் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி செய்தல், கட்டிடக் கைத்தொழில் ஆகியவற்றின் கூலி வீதங்களும், கூலியாட்கள் கிடைக்குந்தன்மையும்.

ஈ. வேளாண்மைப் பொருட்களின் செலவும், கிடைக்குந்தன்மையும்.

உ. முக்கிய வேளாண்மைப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் வசதிகள் பொருளாதார வேறுபாடுகளின் முக்கியத்துவத்தைப் பொறுத்து வாரமொன் றிற்கும், இரு வாரத்திற்கொருபோதும், மாதமொன்றிற்குமாக தரவுகள் சேகரிக்கப்படும். இம்முறையின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகள் பின்வரும் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன:—

அ. பண்டங்கள் வழங்கும் முறையைத் திருத்துவதற்குக் குறுகிய காலக் கொள்கை முடிவுகளை உருவாக்கும்முறையில் கிடைக்கத்தக்க நுகர் வுப்பொருட்கள், வேளாண்மை உள்ளீடுகள் ஆகியவை பற்றிய தகவல் உரிய அமைச்சுகளுக்குக் காலந்தோறும் கிடைக்கத்தக்கன வாகச் செய்யப்படும்

ஆ, நுகர்வு விலைகள், வேளாண்மை உள்ளீடுகள் பற்றிய தரவுகள் நிலப்பரப்புகளுக்கும் அவற்றின் பருவகால ஏற்றத்தாழ்வுகளுக்கும் இடையிலான விலை வேறுபாடுகளை அறிவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. முழு நாட்டிற்கும் சில்லறை விலைக் குறிகாட்டியொன் றையும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும், நிலப்பரப்பிற்கும் வெவ் வேறு குறிகாட்டிகளையும் கணக்கிடுவதற்கும் ஒழுங்கு முறைகள் செய்யப்படுகின்றன.

இ. வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள் பண்டங்களின் சில்லறை விலைகளினதும், இவற்றின் உற்பத்தியாளர் விலைகளினதும் வேறுபாடுகளை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகவல் வழங்குநர்கள், தங்கள் வர்த்தக இலாபங்களில் வைத்திருக்கும் அளவை அறிவதற்கும், உரிய கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் உதவுகின்றது. உற்பத்தி எல்லைப் பரப்புகளுக்கிடையில் உற்பத்தியாளர் விலைகளின் ஒப்பீடு இத்தகைய வேறுபாடு நிலவுவதற்குரிய காரணத்தை அறிவதற்கும் உரிய மாற்று நடவடிக்கை, தேவையாயின் எடுப்பதற்கும் உதவுகின்றது.

ஈ. மேலே குறிக்கப்பட்ட துறைகளில் நிலவும் கூலி வீதங்களின் தரவுகள் இவற்றில் காலந்தோறும் ஏற்படும் ஏற்றவிறக்கங்களை அறிவதற்குக் கூலி வீதக் குறிக்காட்டிகளைத் தயாரிப்பதற்கும், எல்லைப் பரப்புகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் இடையில் கூலி வீதங்களிலுள்ள வேறுபாடுகளை அறிவதற்கும், ஆகக்குறைந்த கூலிச் சட்டத்திற்கும் கூலி நிர்ணய சபைக்கட்டளைச் சட்டத்திற்கும் அமைய இயங்கும் ஏனைய துறைகளின் கூலி வீதங்களுடன் ஒப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கக்கூடியவை பற்றிய தகவல் மிதமிஞ்சிய அளவில் தொழில்வாய்ப்புக்கள் உள்ள பகுதிகளிலிருந்து தொழில் வாய்ப்பற்ற பகுதிகளுக்கு தொழிலாளர்கள் குடிபெயர்ந்து செல்வதை ஊக்குவிப்பதற்கும் துணை நிற்கின்றது. புதிய பயிற்சிகள் வழங்கப்படவேண்டிய துறைகளை இனங்காண்பதற்கும் இத்தகவல் உதவியாக அமைகின்றது.

உ. சந்தை வாய்ப்புக்கள் பற்றிய தகவல் போதிய சந்தை வாய்ப்புக்களற்ற பகுதிகளை அறிவதற்கு உதவுகின்றது. உரிய இடங்களில் சந்தை வசதிகளைத் திருத்துவதை ஒட்டி குறுங்காலக் கொள்கை முடிவுகளை உரிய அமைச்சுக்கள் எடுப்பதற்கும் இத்தகவல் துணை நிற்கின்றது.

**ஆளணி**

ஆளுநர் பின்வரும் மாநாடுகளிற்கு 1978ஆம் ஆண்டில் கலந்து கொண்டார்.

அ பதின்மூன்ருவது தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் மாநாட்டிலும், நெபாளத்தில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஆளுநர் சபையின் ஆருவது கூட்டத்திலும் (சனவரி 14 - 25)

ஆ. இலண்டனில் பொதுநலவமைப்பு மத்திய வங்கி ஆளுநர் மாநாட்டிலும், சுவிற்சலாந்திலுள்ள பஸ்லேலில் நடைபெற்ற பன்னுட்டுத் தீர்ப்பனவுகள் வங்கியின் ஆண்டுப் பொதுகூட்டத்திலும் (28 மே - 20 யூன்)

இ. கொரியா குடியரசிலுள்ள சீயோலில் நடைபெற்ற ஆசிய உற்பத்தியியல் அமைப்பினது ஆளும் சபையின் இருபதாவது அமர்வில் (1-13 யூலை)

ஈ. ப. நா. நி., ப. பு., அ. வ. இன் வாசிங்டனில் நடைபெற்ற ஆண்டுக் கூட்டங்களிலும், தெகிரானிலுள்ள மெல்லி ஈரான் வங்கியின் 50 வது ஆண்டுக் கொண்டாட்டங்களிலும், இலண்டன் வங்கி, இலண்டனிலுள்ள வர்த்தக வங்கிகளுடன் அலுவல் சார்ந்த கலந்துரையாடல்களிலும். (9 செத்தெம்பர் — 12 ஒற்றோபர்)

உ. ஹொங்கொங்கில் முதலீட்டு ஊக்குவிப்பு கருத்தரங்கிலும், சிங்கப்பூரில் அலுவல் சார்ந்த கலந்துரையாடல்களிலும் ( 3 - 12 திசெம்பர் )

கலாநிதி லால் ஜயவர்த்தன நிதி அமைச்சின் செயலாளர், பெல்சியத்திலுள்ள ஐரோப்பிய பொருளாதாரச் சமூகத்தின் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டதையடுத்து 1978 மாச்சு 8ஆம் திகதி தொடக்கம் நாணயச் சபை உறுப்பினர் நிலையிலிருந்து நீங்கினர்.

கலாநிதி டபிள்யு. எம். திலகரத்ன மூத்த துணை ஆளுநர் சனவரி 14-25 வரை, ஆளுநர் வெளிநாட்டிலிருந்தபோது நாணய விதி அதிகாரச்சட்டத்தின் பிரிவு 24 நியதிகளின்படி வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகக் கடமையாற்றினர். கலாநிதி திலகரத்ன 1978 மாச்சு 28ஆம் திகதியிலிருந்து வங்கிப் பணியில்ருந்து நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளராக நியமனம் பெறுவதற்கு இளைப்பாறி, அதே தேதியிலிருந்து நாணயச் சபையின் அலுவலக உறுப்பினராக விளங்கினர்.

திரு. சி. சண்முகம் - நிதி திட்டமிடல் அமைச்சின் பதில் செயலாளர் கலாநிதி. டபிள்யூ. எம். திலகரத்ன அவர்கள் இல்லாதபோது நாணயச்சபையின் அலுவலக உறுப்பினராகக் கடமைபுரிந்தார்.

கலாநிதி காமினி கொரியா, துணை ஆளுநர் வர்த்தகம், அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் செயலாளர் நாயகமாகத் தொடர்ந்தும் பணிபுரிந்தார்.

ஆளுநரின் உதவியாளராக இருந்த துணை ஆளுநரான கலாநிதி டபிள்யூ. இராசபுத்திரம், பன்னாட்டு நாணய நிதியத்தில் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகத் தொடர்ந்தும் பணிபுரிந்தார்

திரு. ஈ. எரமுதுகொல்ல 1978 ஏப்பிரல் 10ல் இருந்து துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார். 1978 ஏப்பிரல் 20ஆம் திகதி தொடக்கம் மூத்த துணை ஆளுநராக பதவியிலமர்த்தப்பட்டார். ஆளுநர் இல்லாது இருந்த போது திரு. எரமுதுகொல்ல நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 24இன் நியதிகளின்படி முதன்மை நிறைவேற்று அலுவலராகக் கடமைபுரிந்தார்.

கலாநிதி எச். என். எஸ். கருணாதிலக, ஊழியர் சேமநிதியத்தின் கண்காணிப்பாளர் 1978 சனவரி 2 தொடக்கம் மதியுரையாளராக பதவியிலமர்த்தப்பட்டு 1978 ஏப்பிரல் 10ஆம் திகதி தொடக்கம் துணை ஆளுநராக நியமிக்கப்பட்டார். கலாநிதி கருணாதிலக 1978 யூன் 23ஆம் திகதி தொடக்கம் வங்கியாளர் பயிற்சி நிலையத்தின் ஆளும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஆளுநரின் உதவியாளரும், நாணயச் சபைச் செயலாளருமான திரு. க. கனகசபாபதி அவர்கள் 1978 ஏப்பிரல் 20ஆம் திகதி தொடக்கம் மூத்த உதவி ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டார்.

திரு. ஜே. ஜி. பி. ஜயசுந்தர, மதியுரையாளர் 1978 ஏப்பிரல் 10ஆம் திகதி தொடக்கம் உதவி ஆளுநர் பதவியிலமர்த்தப்பட்டார்.

திரு. ஏ. பண்டாரநாயக்க, முதன்மைக்கணக்காளர் 1978 நவெம்பர் 11ஆம் திகதி தொடக்கம் இளைப்பாறுவதற்கு முன்பு விடுப்பிலிருந்தார்.

திரு. ரி. சச்சிதானந்தம், முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளர், 1978 மாச்சு 27ஆம் திகதி தொடக்கம் பெரும்பாக கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிற்கு விடுவிக்கப்பட்டு, 1978 மே 1ஆம் திகதி தொடக்கம் வங்கிப் பணிக்கு மீள அழைக்கப்பட்டார். திரு. சச்சிதானந்தம் 1978 நவெம்பர் 24 தொடக்கம் திணைக்களத் தலைமை நிலையில் மதியுரையாளராகப் பதவியிலமர்த்தப்பட்டார்.

திரு. டி. எல். கன்னங்கரா, வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், சாம்பிய மத்திய வங்கியில் பணியாற்ற விடுவிக்கப்பட்டு, 1978 பெப்புருவரி 1 தொடக்கம் வங்கிப் பணிக்கு மீண்டார். திரு. கன்னங்கரா அவர்கள் கடமைக்கு மீண்ட போது வங்கித்தொழில் அபிவிருத்தி மதியுரையாளராக திணைக்களத் தலைமை நிலையில் நியமிக்கப்பட்டார்.

திரு. என். கதிர்காமத்தம்பி, பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் 1978 சனவரி 2ஆம் திகதி தொடக்கம் நாணயத் திணைக்களக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கலாநிதி ஏ. ஜி. ஏ. டி. பெரேரா, பணியாளரகப் பணிப்பாளர், 1978 சனவரி 2 தொடக்கம் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

திரு வி. எஸ். சுப்பிரமணியம், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், 1978 நவெம்பர் 10 தொடக்கம் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

கலாநிதி. கே. எஸ், ஈ. ஜயதிலக, பொருளாதார ஆராய்ச்சி மேலதிகப் பணிப்பாளர் 1978 சனவரி 2 தொடக்கம் புள்ளி விபரவியல் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்,

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன, 1978 சனவரி 2 தொடக்கம் பொருளாதார ஆராய்ச்சிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. ஏ. ஆர். பொன்னுந்து, மேலதிகச் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் 1978 ஏப்பிரல் 28இல், 1977 திசெம்பர் 3ஆம் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும் முறையில் பதில் செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. எஸ். டபிள்யூ. பீ. அமரசூரிய, பதில் செயலாளர் 1978 சனவரி 2 தொடக்கம் ஊழியர் சேமநிதி பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. எச். பிரேமரத்ன, துணை முதன்மைக் கணக்காளர் 1978 சனவரி 2 தொடக்கம் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார். திரு. பிரேமரத்ன ஒரு ஆண்டு காலத்திற்கு 1978 செத்தெம்பர் 12 தொடக்கம் சாம்பிய மத்திய வங்கியில் நிதி மேற்பார்வையாளராகப் பணி புரிய விடுவிக்கப்பட்டார்.

கலாநிதி எஸ்.ரி.ஜி. பெர்ஞந்து, பொதுப்படுகடன் துணை மேற்பார்வையாளர் 1978 சனவரி 2 தொடக்கம் பொதுப்படுகடன் பதில் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. ஆர், எம். தென்னக்கூன், பணியாளரகத் துணைப் பணிப்பாளர், 1978 சனவரி20 தொடக்கம் பதில் பணியாளரகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. ஆர்.டி.கே.ஜே. அத்தநாயக்க, துணைப்பணிப்பாளர், முகாமைக் கணக்காய்வு 1978 மார்ச்சு 27 தொடக்கம் முகாமைக் கணக்காய்வுப் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திரு. யு. ஏ. டி. சில்வா, துணை முதன்மைக் கணக்காளர் 1978 நவெம்பர் 10 தொடக்கம் பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

திரு. எஸ். ஈஸ்பரதாசன், கலாநிதி எல். ஈ, என். பெர்ஞந்து திறைசேரிக்கு பகுதிநேர விடுவிப்பில் தொடர்ந்தும் இருந்தனர்.

கலாநிதி பி.ஏ.எஸ். தகநாயக திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு 1978 மார்ச்சு 19 தொடக்கம் வங்கிப் பணிக்கு மீண்டார்.

திரு. ஜி.எம்.பி.டி.டி சில்வா, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு விடுவிக்கப்பட்டு 1978 பெப்புருவரி 8 தொடக்கம் வங்கிப் பணிக்கு மீண்டார்.

திரு. பி.எம். நாகாவத்தை, 1978 சனவரி 3 தொடக்கம் சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவராக கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டார். திரு.நாகாவத்தை 1978 செத்தெம்பர் 1 தொடக்கம் வங்கிப் பணிக்கு மீண்டார்.

கலாநிதி ரி. டபிள்யூ. வை. ரணவீர, திறைசேரிக்கு விடுவிக்கப்பட்டு பின்னர் 1978ஏப்பிரல் 16 தொடக்கம் ஐக்கிய நாடுகள் சபையில் பணி புரிவதற்கு மேலும் விடுவிக்கப்பட்டார்.

திரு. ஈ. எம். டி. பீரிஸ், கடற்ருெழில் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டு 1978 பெப்புருவரி 2 தொடக்கம் வங்கிப் பணிக்கு மீண்டார்.

திரு. டபிள்யூ எல். டி. சில்வா, 1978 யூன் 21 தொடக்கம் 'மார்க்பெட்' பொது முகாமையாளராக உணவு கூட்டுறவு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டார்.

மீள ஆயும் ஆண்டில் மத்திய வங்கியின் பின்வரும் அலுவலர்கள் அரசாங்கத்திற்கு முழு நேர விடுவிப்பில் தொடர்ந்து இருந்தனர்.

திரு. ரி.ஜி.புஞ்சி அப்புகாமி–அரசாங்க இரத்தினக்கற் கூட்டுத்தாபனம்
திரு. எஸ். இராசலிங்கம்–திறைசேரி
திரு. பி. எம். ஹசன்–உணவு கூட்டுறவு அமைச்சு
திரு ஏ. ஏ. டி. யஸ்ரின்–கைத்தொழில் அமைச்சு
திரு. எம். பீ. திசஞயக்கா–திறைசேரி